
ஓலை 47 | ஓசை 164 | துலை [அக்டோபர்] 2023

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை [ம] சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால்,
ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது
வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence
there is none equal to that of being free
from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

நிர்வாக குழு

குரு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்


அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.


அகர முதல இலக்கிய பேரவை


Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# நன்மையே செய்க

**பா வகை: பிரிமொழி நேரிசை சிலேடை வெண்பா**
**(பிரிமொழி நேரிசை இரட்டுற மொழிதல்)**

ஒளியும் இருளாய் உடையுமோர் வாழ்வில்
அளிக்கும் வினைகளே ஆற்றும் - களிப்பை
உணர்ந்திடும் மெய்ப்பொருள் உச்சத்தில் ஏற்றும்
பிணையும் செயலதன் பின்

பொருள் 1 - ஒளியும் இருளாய் உடைய ஓர் வாழ்வில் நாம் செய்யும் செயலே நமக்கு இன்பத்தை தரும். அதை உணர்ந்து நடந்தால் நமது செயலே நம்மை உச்சத்தில் ஏற்றும்

பொருள் 2 - ஒளியும் இருளாய் உடையும் நம்வாழ்வில் தீமையை செய்தால். நம் தீமைகளே களிப்புடன் நம்மை ஆற்றும். இதன் பொருள் உணர நம் செயல்களின் பின்விளைவு நம்மையே பின் சேரும்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# நட்சத்திரப் பரல்கள்



வான் அரங்கில்
வாடாத தோரணங்கள்

திங்கள் பவனிவரும்
திக்கில் நாள்மீன் கூட்டம்.

ஆதவனைச் சுற்றி
ஆனந்தமாய்ச் சிரிக்கும்.

கடலோடிக்குத் திசைகாட்டி
கடமையை ஆற்றிடும்.

மேகத்திரைக்கு நடுவே
மோகத்தோடு கண்சிமிட்டும்

சிதறிய பரல்களாய்ச்
சிங்கார நட்சத்திரங்கள்.

புரவியாய் அடுப்பாய்
புன்னகைக்கும் ஆரலாய்

மான்தலை மூதிரை கழையாய்
காற்குளம் கட்செவி தொடுநுகமாய்

கணை,உத்திரம் கையாய்
அறுவை விளக்கு முறமாய்

பனை துளங்கொளி குருகாய்
உடைகுளம் கடைக்குளம் முக்கோல்

காக்கை செக்கு நாழியாய்
முரசென தோணியெனக்

காலங்காலமாய் ஒளிர்ந்தே
காலங் கடந்தும்

எழிலாய்க் காட்சி தந்தே
காண்போரைக் கவரும்.


கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# போனஸ் கனவுகள்

நெருங்கும் பண்டிகைக்கு
முந்தைய நாட்களிலிருந்து வரவேற்பறையில் ஒளிபரப்பாகும்
தொடர் விளம்பரங்களால்
குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவரும்
வெவ்வேறு கனவுகளில் மிதந்திட

வாங்கும் ஒன்றுக்கு இன்னொன்று இனாமாகும்
பலகாரத்துக்கு தேவையான பொருட்களின்
பட்டியலோடு காத்திருக்கும் அம்மா.

பழுதான மூக்கு கண்ணாடியை மாற்ற
ஒரு மாதமாக பரிசோதனை முடிவுகளோடிருக்கும் அப்பா



நகரில் புதிதாய் திறக்கப்பட்டுள்ள பிரமாண்ட
துணிக்கடைக்கு செல்ல நாள் குறிக்கும் மனைவி.

புது வரவாய் லட்சங்கள் மதிப்பில் சாலைகளில் பறக்கும்
இருசக்கர வாகனக் கனவோடு மகன்.

கல்லூரி பாடங்களுக்கு அவசியமென்று
ஐந்தாம் தலைமுறை அலைபேசி ஆசையில் மகளென.

ஆளுக்கொரு வண்ணங்களில் எழுதிய
விண்ணப்பங்களோடு எல்லோரும் காத்திருக்க

கடந்த முறை வழங்கிய ஒற்றை இலக்க விழுக்காடு
இம்முறையாவது இரட்டை இலக்கங்களாய் மாறி
எத்தனை நாட்களுக்கு முன்
வங்கியில் வரவு வைக்கப்படுமென

முப்பது நாட்களுக்கு மேலாக
சிந்தனையெல்லாம்
தீபாவளி போனஸை
சு(ப)ற்றியே வட்டமடிக்க

போனஸ் தேதியை குறிப்பிடும் கடவுள்
போனஸுக்கான அறிகுறிகளின்றி கணினியின் முன்பு
வேறொரு யோசனையில்
அமைதியாகவே இருக்கிறது.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# மந்திரக்கோல்

சூதும், பொறாமையும்
வஞ்சகமும், துரோகமும்
நிறைந்த தந்திர உலகில்
பிறப்பெடுத்தது ஒரு மாயை!
கண்முன் விரியும்
காட்சிகள் மாயை!
நித்தம் நித்தம் இந்த
மந்திர உலகின் தளைகளில்
சிக்குண்டு சிதறுவதே
விதியென்று நம்மை
நம்ப வைத்த மாயை!
வேண்டியது கிடைத்திட,
அடுத்தவரை அழித்திட,
மந்திரத்தை நம்பிடும்
மாயவலையில் சிக்குண்டு
சிதறுகிறோமே!
ஜிகினா காகிதம் சுற்றி
நம் கண்ணில் படும்
பிம்பங்களை ஆறாம் அறிவு
கொண்டு ஆராய்ந்து
தந்திர உலகின் தளைகளை
வென்றிடலாம்!
வாழ்க்கைப் பாதையை
மாற்றிடலாம்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# இசையே அருமருந்து

இசை கேட்பதற்கு என்றும் அழகு
பாடும் குயிலின் இசை அழகு
ஓடும் நதியின் சத்தம் அழகு
பறவைகள் பேசும் இசை அழகு
காற்றோடு உரசும் இசை அழகு
மழையின் இசையும் நமக்கு அழகு
வானத்தில் எழும் பேரொலியும் அழகு
தண்ணீரில் எழும் இசையும் அழகு
இசையின் எண்ணிக்கை எண்ணில் அடங்கா
ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம் அத்தனையும்
கேட்டால் நமது துன்பம் எல்லாம்
நீங்கிட செய்து மனம் குளிர்ச்சியூட்டுமே




கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முகமும் தமிழே!!

# வறண்டு போனதே

தென்காசிச்சாரலாய்
தென்றல் வீசு வந்த
தென்னவனே.

தேகம் நின் சிலிர்ப்பில்
சிலிர்த்த நாட்களெல்லாம்
நினைவில் நெருஞ்சியாய்
குத்திக் கிழிக்கின்றதே.



கோடிமழையும் கொட்டி
தீர்க்கின்றது, குடையின்றி
நடந்து செல்கிறேன்
நின் சிந்தனையின் கொதிப்புகள்
குளிரட்டுமென்று.

திவலையின் ஸ்பரிசங்கள்
தீயாய் இவ்வாட்டியை சுட்டெரித்து
வர்ணனின் வாரிசும்
வஞ்சித்து செல்கின்றதே.

தென்றலோடு கதைக்கின்றேன்
கடந்து போன நாட்களின்
நிஜங்களை அசைப்போட்டு.

மழைக்கண்டு மயிலாய்
மாறிய மனமோ மனம்கசந்து
போய்விட்டதே மன்னவனின்
மௌனத்தால்.

அலைகடலாய் நீ அன்பை
பொழிந்தவனில்லை
கொஞ்சும் மொழிகளால்
என்னை குளிர்வித்தவனில்லை
கோவ மொழிகளாய்
சுட்டெரித்தவனுமில்லை.

ஏனிந்த மாயமோ
எவன் போட்ட முடிச்சோ
எப்பிறவியின் பந்தமோ
என்னுள் உதிரமாய்
உறைந்துவிட்டாயடா.

அல்லாமல் கிள்ளி கொடுத்த
நின் நேசமும் இன்று
கானலாய் மாறிப்போய்
கார்கால மழையாய் பொழிந்து
இவ்விளம்பிடியாளின் விழியின்
கண்ணீரும் வறண்டு போனதே!

கவிஞர் சீமா

# உன்னால் முடியும்

விடியும் என்று விண்ணை நம்பு
உன்னால் முடியும் என்று
உன்னை நம்பு
விடியும் என்ற நம்பிக்கையில்.

உறங்க செல்லும் நீ
முடியும் என்ற எண்ணத்தோடு
எழுந்திரு

நீ நினைத்ததை நிறை
வெற்றி சாதனை
செய்ய.



முடியும் வரை முயற்சி செய்
உன்னால் முடியும் வரை அல்ல.
நீ நினைத்தது முடிக்கும் வரை.
சரியான பயணத்தில்
மகிழ்ச்சியான பயணத்தில்

கவிஞர் ஜெ.தேவி ராஜசேகர்,சென்னை

# இயற்கையே நமது இதயம்

இயற்கையை அழித்து எவ்வாறு வாழ்வது?
செயற்கையால், ஏற்படும் வாழ்வில் தாழ்வது
இதயத்தை இழந்துவிட்டு என்ன செய்வோம்?
இயற்கை அழித்து இன்னல் செய்கிறோம்
பூமியை உடைப்பதற்கு உரிமை இல்லை.
போற்றிக் காப்பதற்கு கடமை உண்டு
வேள்வி செய்தாலும் வானம் பொழியாது
மண்வளம் காக்கவும் மனித வளம் காக்கவும்
இயற்கையை நேசிப்போம் கடவுளாய் பூசிப்போம்
மரத்தை வெட்ட என்றும் யோசிப்போம்
இல்லையேல் உயிர் வாழவே என்றும் யாசிப்போம்
நீருணவு சோறுணவு தருவது மழையே
மழையைப் போற்றி என்றும் பிழைப்போம்
இயற்கையைக் காக்க நாமே உழைப்போம்
வீதி எங்கும் விதைகளைப் போடு
உருவாகும் எங்கும் இயற்கைக் காடு
உயிர்வளி நமக்கு இயல்பாய் கிடைத்திடும்
ஏற்படும் இன்னல்கள் மின்னலாய் நீங்கிடும்
எல்லா உயிர்களும் இன்புற்று இருக்கவே
இயற்கை என்றும் படைப்பின் ரகசியம்
இயற்கையைக் காத்தல் ஒவ்வொருவருக்கும் அவசியம்
நீரின்றி அமையாது உலகு எங்குமே
நீயின்றி எவர்தான் இயற்கையை காப்பது?
மலர்கள் அழகாய் பூத்துக் குலுங்குது
பல கைகள் வீசி எறிந்தால் நெஞ்சம் நடுங்குது?
இயற்கை எழிலை என்றும் ரசிப்போம்
அதனைக் காப்பதைத் தொழிலாய் கொள்வோம்
இயற்கையோடு இணைந்து வாழ்வை வெல்வோம்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# காதல் பூக்கள்

அவளின் நிறம்
சிகப்பில்லை
கருப்புமில்லை
மாநிறம்
அதுதான் சரியான
நிறமும் கூட;
கூட்டத்தில்
ஒருத்தியாய் இருக்கிறாள்.
அவள் ஒருத்தி மட்டுமே
அழகென்று
சுண்டியிழுக்கிறது
என் அடிமனதை.
அவள் காதோரத்தில்
ஓர் ஒற்றை ரோஜா.



/

அவள் முதன்முதலாய்
தந்த முத்தத்தையும்;
மகிழ்ச்சி நிரம்பிய
அதன் சுவையையும்;
இன்பம் கூட்டிய
அந்த அந்திப் பொழுதையும்;
காலங்கள் பல கடந்தும்
இன்னும் மறக்கவே இல்லை நான்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# இல்லறம்!

குடும்பத்தில் கோபமும்
குடும்பப் பிடியும் அரங்கேற்றம்
தம்பதியர் இடையே
ஊடலும் கூடலுமே.

அறமெனப் படுவதே
அல்லாடும் வாழ்க்கை
அஞ்சாமல் இழுத்து
அசர வைத்திருக்கும்

நிலையாமை நினைவுகளோடு
நிர்மூலம் ஆகும்
நீர்க்குமிழி நாட்களில்
நிறங்கள் காட்டிடலாமே.



இதயங்கள் ஒன்றிணைத்து
இன்சொல் நிலையில்
நேர்க்கோட்டில் பயணிப்பதே
நேர்த்தியான உபயம்

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# விதையொடு நாள் விருட்சமாகட்டும்

இது தனிப்பட்ட பயணமில்லை - ஆனால்
தனித்துவமான பயணம்.

தட்சணைகளின் எதிர்ப்பார்ப்புக்கள் இல்லை
தீட்சண்யம் நிறைந்ததோர் இலக்குதான் எல்லை

பல பழிச்சொற்களும்
இழிச் செயல்களும்
எனக்கு வழிகாட்டுகின்றன
முன்னேறிச் செல்வதற்காய்.

அந்தக் கறை படிந்த கரங்களின் குட்டுக்களை
எனதாக்கிக் கொள்கிறேன்
இல்லையேல் பல இருட்டடிப்புக்களால்
இந்தப் பயணம் தடுக்கப்படலாம்.

வலிகளைப் பொறுக்கிறேன்
வழியொன்று செப்பனிட்டு
நிறைவு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

முதுகுக்குப் பின்னால் தொடரும்
நயவஞ்சகத்தின் முகவரிகளைத் தேடி
நாழிகைகளை நாசம் செய்ய விருப்பமில்லை யெனக்கு.

குழி பறிக்கும் இடத்தில் நின்று
வழியமைத்துக் கொண்டிருக்கின்றேன்.

இனி
செவ்வனே
தொடரட்டு மிந்தப் பாதையில்
ஓர் அருட் பயணம்.



கவிஞர் மக்கொனையூராள்

# உறவுகள்

உயிரில் கலந்தது உறவுகளெனும் நாமம்
உலகை வெல்லும் அற்புத மந்திரம்
உரிமையுடன் தட்டிக் கொடுக்கும் நம்பிக்கையின் சிகரம்
உணர்வோடு அன்பும் கலக்கும் நதிகளாகும்

நாட்புறமும் தோழமையால் தோரணம் ஆகும்
பகைமையும் அழிந்திடும் உறவுகள் ஒன்றானால்
ஒற்றுமை கூட்டாகி பலமான அரனாகும்
அசைத்திட முடியாத இரும்பு கோட்டையாகும்

விழாமல் தாங்கிடும் விழுதுகள்  இவர்களோ?
விளையாட்டும் சிரிப்பும் மனம் வீசும்
விலை மதிப்பில்லா பொக்கிஷம் இதுவோ?
வினை எண்ணா நல்மனம் இவர்களோ?



மூத்தோர் கதைகளில் பாடங்கள் கற்போம்
மூத்தோர் வழியே முன்னுதாரணமாய் மாறுமே
முத்திய நோயும் மறைந்திடும் இவர்களாலே

ஆயிலும் கூடுமே ஆயிரம் வர்த்தைகளாலே
ஆயுள் உள்ளவரை அனைத்திடும் கரங்களே
ஆ வின் பிறப்பிடம் இதுவே
ஆக்கம் தரவைக்கும் உன்னத சொந்தமே

அன்பெனும் தூண்டிலில் மாட்டிக்கொண்டோம் சொந்தமாக
பண்பென்ற புள்ளியில் தொடர்ந்தது பந்தமே

சிறு சிறு சண்டைகளை தூர எறிந்திடு
சிற்பமாய் நின்று சிந்தையில் வலுப்பெறுவோமே
சங்கிலியால் பிணைந்த பிணைப்பிது
சற்றும் உடைத்து விளக்கிடாது காத்திடு

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# அம்மா

ஆழ்கடல் பெருமை அம்மா
வழிகளில் சிகரம் அம்மா
வாழ்வின் தேடல் அம்மா
கர்பத்தின் புனிதம் அம்மா



கவிஞர் ஸ்ரீவள்ளி,கோவை

# மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்

மாற்றங்களை முடிந்தவரை ஏற்றுக் கொள்ளும்
மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இன்று உங்களை விரும்பியவர்கள்
நாளை உங்களை வெறுக்கலாம்.

உங்களால் விரும்பப்பட்ட ஒன்றை நீங்களே தூக்கியெறியலாம்.
அனைத்திற்கும் தகுந்த காரணம் இருந்தே தீரும்.

எதிலும் முற்றாகத் தங்கி வாழ வேண்டாம்.
உங்களுடைய வாழ்வில் சந்திக்கும்
எந்த மனிதர்களோ நிகழ்வோ நிரந்தரம் கிடையாது.
யாரையும் காயப்படுத்த வேண்டியதில்லை.
விலகுபவர்கள் தாராளமாக விலகிச் செல்லட்டும்.

நீங்கள் நீங்களாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.



அன்பென்பது மாத்திரம் தான் வாழ்நாள் தேவை.
அதை வீணாக எவரிடமும் கொடுக்கவோ,
எடுக்கவோ தேவையில்லை.

புதிய விடயங்களை ஆதரிக்க கற்றுக் கொள்ளுங்கள்.
வாழ்க்கை நீங்கள் விரும்பும் விதத்தில் உங்களை ஆதரிக்கும்.

கவிஞர் சுமையா சத்தார்,நெல்லியகம (அனுராதபுரம்)

# நம் ஆதி நேசம்

நாம்
நேசித்துக்கொண்டிருந்தோம்

நேசித்த பொழுதுகள்
நியாயங்களை
யாசித்த பொழுதும்

நேசத்தின் பச்சயம்
நீரின்றி உபவாசம் செய்தபோதும்



நேசித்த புரிதல்கள்
இணைப்பின்றிய காலசூன்யத்தில்
பிரவேசித்தபோதும்

நேசத்தின் பறவை
உயிர்க்கூட்டை விட்டு
ஊண் தேடிப்பறந்த போதும்

மீந்து கிடந்த நேசத்தின் பெரும்புன்னகை
சலனமற்ற ஓவியத்தை
வரைந்தபோதும்

நேசத்தின் ஆன்மா
மாயத்திரை சூடி
கம்பளிப்பூச்சியாய்ப்
பலயுகங்கள் ஊர்ந்தபோதும்
நாம் நேசித்துக்கொண்டே
இருக்கிறோம்

ஆயினும்
நம் ஆதிநேசமானது
நிர்ப்பந்தமற்ற வெளியொன்றை
தேடியலைந்துகொண்டே இருக்கிறது!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# மது என்னும் மானுட எதிரி

கண்களால் பார்க்க வைத்தான்
அருகினில் அழைத்தான்
சற்றே நுகர வைத்தான்
பிறகு பருக வைத்தான்
அவ்வப்போது அழைத்தான்
நண்பனென்று நினைத்தேன்
நகமும் சதையும் என்பதாய்
எண்ணிக்கொண்டேன்.
நிழலாகவே கூட வந்தான்
நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தான்
அளவு மீற வைத்தான்
அடிமையாய் ஆக்கிவிட்டான்
ஊராரால் பழிக்கவைத்தான்
உறவுகளால் வெறுக்க வைத்தான்
உணர்வுகளை மழுங்க வைத்தான்
நாடி நரம்பினை தளர வைத்தான்
தள்ளாட்டத்தில் என்னை அறிந்தேன்
தடுமாறிய பொழுது சற்றுணர்ந்தேன்
எதிரியை நம்பி இருக்கிறேன் என்று.




கவிஞர் இரா.இராஜமோகன்,அயன் குறிஞ்சிப்பாடி

# கண்ணாளனே!

கடிவளமாக பயணிக்கும் வாழ்விலே
கண்டிடும் காட்சியுமே
கனிசமாய் மாறிடுமே
கண்முன்னே கலையழகாய்
கண்ணிமைக்காமல் களித்திடலாம்
கதறியழும்போதும் கண்ணருகில்
கண்காட்சி பொருளாகாமலே
கண்மணியிரண்டிலும்
கச்சிதமாக சந்தோஷத்தையும்
கரத்திலும் பிடித்திடவே
கடைக்கண்பார்வையையும்
கதியென்று வந்தவளும்
கண்ணீரில் நனையவும்
கட்டியவனே காரணியென்று
கடும் வலிகளுக்கிடையே
கல்யாணம் செய்ததுமே
கஷ்டங்களும்,கவலைகளும்
கவிதையாக ஏந்திடவா?
கடைக்கண்பார்வைக்கு காத்திருந்ததும்
கரம்பிடித்ததுமே
கள்ளகபடமற்ற வாழ்வில் நுழைந்ததுமே
கடுந்துயரை கவனிக்காமலே?
கடமையை கவனிக்கசென்றாயே
கண்ணாளனே!



கவிஞர் நீலாசுபாஷ்

# 15. சிலப்பதிகாரம் (பதினைந்து)

14. ஊர் காண் காதை .

1. கோவலன் கண்ணகியை அடிகளிடம் ஒப்படைத்தல்:
பொழுது புலர, மதுரை நகரம் துயிலெழுந்து கதிரைக் கண்டது
தொழுது நிற்க சிவன், திருமால், ஆலய மணிகள் ஒலித்தன
வாழும் வழிதேடி கோவலன் மதுரை செல்ல ஆயத்தமானான்
கொழுநன் அடிகளிடம் மனைவியை காத்தருள வேண்டினான்

2. கவுந்தியடிகள் கூறிய அறவுரை ;
தீய செயலைச் செய்தால் தீயனவற்றை தானே சுமக்கவேண்டும்
ஆய கலைகள் கற்றிருந்தாலும் நல்லொழுக்கமே மேன்மை தரும்
மாய மானை விரும்பிய சீதை இராமனைப் பிரிந்து வாடினாள்
தாயம் விளையாடி நளன் மனைவி தமயந்தியுடன் காடு சென்றான்
இத்தொல்லை உனக்கில்லை மனைவியோடு வாழ்கின்றாய்
இத்துன்பம் உன் ஆசை காரணமாக நிகழ்ந்துள்ளது, விலகும்
இத்தகைய இடர்கள் தொடர்ந்து வரும் பழைமையுடையது
பத்திரமாக மதுரை சென்று பொருந்துழி அறிந்து வருவாயாக "



3. மதுரையில் கோவலன் :
அகழியைக் கடந்து, நுழைவாயில் வழியாக மதுரை வந்தான்
நகர வீதியில் தன்னை அடையாளம் தெரியாதவாறு நடந்தான்
பகல் பொழுது சாய்ந்து மாலை மயக்கத்தில் தென்றல் வீசியது
மகளிர் தன் காதலர்களுடன் உல்லாசமாக கூடி மகிழ்ந்தார்கள்

4. மதுரையின் இயற்கை நிலை :
வாடைக் காற்றோடு குளிர்காற்று சூழ கார்காலம் தொடங்கும்
பீடை மாதம் மார்கழி தொடர்ந்து முன் பனிக்காலம் இளவெயில்
தைமாதம் நெல்மணிகள் அறுவடை காலம் அடுத்து பங்குனி வர
கோடை விழா காமன் பண்டிகை தென்றலோடு வசந்தம் வரும்

5. மகளிர்தம் காதல் மயக்கம் ;
ஆடவரும் மகளிரும் முற்றத்தில் அமர்ந்து நிலவில் இன்புறுவர்
கூடவரும் தலைவனை வழிமேல் விழிவைத்து காத்திருப்பார்கள்
நாடி திளைத்த எட்டுவகை இன்பங்களில் ( தலை, நெஞ்சு, பல், இதழ்,
மிடறு, நா, மூக்கு, அண்ணம் ) மயக்கம் தெளியாமல் கிடப்பார்கள்.

6. ஆடல் மகளிர் வாழும் மதுரை :
இருவகை நடனமாதர்கள் அரசன்முன் , வீதிகளில் ஆடுவார்கள்
நான்குவகையில் ஆடுவார்கள் நிற்றல், இயங்கல், கிடத்தல், இருத்தல்
அறுபத்துநான்குவகை கலைகளிலும் தேர்ந்த நடனமாதர்கள்
அனைத்துவகை மாந்தரும் தேனுண்ட வண்டுபோல் மயங்குவர்

7. மதுரை கடைவீதிகள்:
தடையின்றி விற்க வணிகர்களுக்கு தனித்தனி கடை வீதிகள் உண்டு
உடை அலங்காரப் பொருட்கள் வகைகளுக்கு ஏற்ற கடை வீதிகள் தனி
விலை உயர்ந்த பவளமணி கடைகள் பெண்கள் கூட்டம் அலை மோதும்
கலை நயமிக்க விளக்குகள், செம்பு வெண்கலப் பாத்திரங்கள் தனி வீதி
குறைபாடுகளற்ற மரகதம் புஷ்பராக கற்கள் விற்கும் வீதிகளும் உண்டு
நிறைவான வயிடூரியம், கோமேதகம் , அக்கடை வீதிகளில் கிடைத்தன
பிறைநிலா போன்ற வெண்முத்து மாலைகளுக்கு கடைகள் இருந்தன
முறையான பாதுகாப்பில் பகைவர்கள் அச்சம் இன்றி கடைகள் இருந்தன

8. பொன் விற்பனை செய்யும் வீதியில் கோவலன் .
ஆங்கு சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம், பொன் வணிகர்கள்
நான்கு வகை வீதிகளில் உரிய கொடிகளைக் கட்டிவைத்திருந்தார்கள்
எங்கு பார்த்தாலும் கண்கள் கூசும் பொன் நகை கொடிகளாக தொங்கின
சங்கொலி கேட்டு இரவின் நேரம் அறிந்து கோவலன் வீடு திரும்பினான்

...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# மழை

கண்ணாடிப் பூக்களாய் மண்ணை முத்தமிட்டாய்
கண்மூடித் திறக்கும் முன்னே காணாமல் போகிறாய்
நீ முத்தமிட்டதால் மண்ணும் மணக்குது
மக்கள் மனமும் குளிருது
நெல்மணியும் வளருது
பல மக்களின் பசியும் தீருது.



கவிஞர் ஜோதிமணி, பெரிய குமாரபாளையம்

# நம்மால் ஏது முடிகிறது

பூவைக் குடைந்து
புதினங்கள் படைத்திட
படைத்தவன் மட்டுமே சிற்பி.
நம்மால் ஏது முடிகிறது?
நட்டு ரசிக்கத்தானே முடிகிறது.

அரும்பின் உள்ளேயும்
அற்புத வரணங்கள் கலந்திட
ஆண்டவன் மட்டுமே கலைஞன்.
நம்மால் ஏது முடிகிறது?
நட்டதை வரையத்தானே முடிகிறது.



இயற்கை மை பூசிட
இதழ்களில் வாசனை பரப்பி
வரைந்தவன் அவனே ஓவியன்.
நம்மால் ஏது முடிகிறது?
நயந்து பாடிடத்தானே முடிகிறது.

புல்லிக்குள் பூவிதழ் நுழைத்து
அல்லிகளாய் விரித்திட
ஆக்கியவன் மட்டுமே அறிஞன்.
நம்மால் ஏது முடிகிறது?
அழகை ரசிக்கத்தானே முடிகிறது.

புல்லுக்குள் தாளை வைத்து
பூதளத்தின் பசுமை காத்திட
படைத்தவன் மட்டுமே நெறியாளன்
நம்மால் ஏது முடிகிறது?
நடந்து மிதிக்கத்தானே முடிகிறது.

பூச்சிகளைக் கவர்ந்திட
பூந்தளிர் நா நீட்டிக் கவர்ந்திட
சூலகத்தின் சூட்சுமங்கள்
சூழ்கொள்ளச் செய்பவனே உரிமையாளன்
நம்மால் ஏது முடிகிறது ?
படம் பிடித்துப்போடத்தானே முடிகிறது.

கவிஞர் செண்பகச் சோலையாள்,ஆய்ஷ்(இலங்கை)

# இழப்பென்பது மரணம் தவிர வேறேது

நீங்கள் எதை இழப்பு என நினைக்கிறீர்கள்

இங்கு மரணம் ஒன்றைத் தவிர
வேறு எதுவும் இழப்பே கிடையாது.
ஏனெனில் ஒரு இழப்பு
இன்னுமொரு அருளால் நிரப்பப் படுகிறது.

அப்போது பேரானந்தம் அடைகிறோமல்லவா
அப்படியென்றால் இழப்பெங்கு இருக்கிறது.

அற்புதமான வாழ்க்கை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது
உறுதியாக நம்புங்கள்

யாரையும் ஏமாற்றாத நல்ல உள்ளம்
நீங்களாக இருந்தால்
உங்களிடம் வந்திருக்கும் அலட்சியம்
உங்களது வாழ்வில் வரவிருக்கும் துன்பத்தை
விரட்டுவதாகவும் உங்களுக்கென இருக்கும்
அருளை உங்களிடம் சேர்ப்பதற்கான
வழிப்பாதையாகவுமே அமையும்.



கவிஞர் சுமையா சத்தார், அனுராதபுரம், நெல்லியகம்

# காதல் பறவைகளாய்

பனிமலராய் மலர்ந்த மங்கையும்
பசலையில் பனித்துகளாய் பரிதியில் மறைய

பழங்கால அசுணமாய் பற்றிசையில் பயணித்தே
பறையிசையில் மெல்ல மெல்ல பழியிட.

பரிதியாய் நின் விழிகள் வதைத்தே
பனித்துளியாய் மறைந்துருகிட செய்ய
பறையோசையாய் செவியெட்டும் போவேனே
நின் கடுஞ்சொல்லில் மடிந்தே.

பாசப்பற்றாய் நீடூழி யாம் இணைய
பனையென வேரூன்றி நின்றிடவே
படிந்த எண்ணத்தோடு
பயணமாய் நின் கரத்தில் இணைந்த ரேகையென
பறந்திடுவோமா காதல் பறவைகளாய்
வான்னோக்கியும்
வாழ்வை நோக்கியும்



கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# பயனிலசொல்லாமை

## அதிகாரம் 20

பயனற்றச் சொற்களை உதிர்க்காதே

இவ்வாறு நண்பர்களிடம் உதிர்த்தாய் எனில் அறம் அற்றுப்போகுமே
அற்று போனாலும் அதைவிட தீமையும் தருமே

பயனற்றசொற்களை உதிர்த்தாய் எனில்
உன்னைப் பயனற்றவனாக்கி விடுமே

பண்பும் பயனும் அற்ற சொற்களை
பலர் முன் பகிர்ந்தால் உன்னை விட்டு மகிழ்ச்சியும் நன்மையும் மாய்ந்து விடுமே

நற்பண்பு உடையோர் பயனற்றச் சொற்களைக் கூறுவர் எனில்
அவர் மதிப்பும் மரித்து விடுமே

பயனற்ற சொற்களை உதிர்த்து பயனடைய நினைக்காதே
நீ குழந்தை அல்ல பதர் என சொல்லுவர் உலகத்தோர்




இனிமையான சொற்களைச் சொல்லாவிடினும்
பயனற்றச் சொற்களைக். கூறமாட்டர் சான்றோர்

அறிவுடையோர் பயன்தரா சொற்களைத் தன்னை அறியாமல் கூறி
தன்னைத்தானே இழிவு படுத்த மாட்டர்

நீ கூறும் சொற்கள் பயனுள்ளவை எனில் கூறு
எக்காரணத்தைக் கொண்டும் பயனில்லாச் சொற்களைக் கூறி
நீ அறிவிலி என பறைசாற்றாதே

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# இடுக்கண் அழியாமை

## அதிகாரம் : 63




துன்பத்தில் தளராது
புன்னகைத்து ஓடவிடு.
துன்பம்நெருக்கி எதிர்க்கவல்ல
நல்வழி இதன்றிவேறில்லை.

பெருவெள்ளமாய் பெருகிவரும்
துன்பத்தின் தன்மையதை.
உள்ளத்தால் நினைத்தமட்டில்
ஒன்றுமில்லாது மறைந்துபோம்.

துன்பங்கண்டு கலங்கா
மனத்தெளிவு கொண்டோர்.
துன்பத்திற்கே துன்பந்தந்து
வென்றோங்கி நிற்பர்.

தடைவென்று வண்டியிழுக்கும்
எருதுபோல் விடாமுயற்சியை.
தன்னகத்தே கொண்டோனுக்கு
வருந்துன்பமே துன்பப்படும்.

தொடர்துன்பம் மேவிடினும்
கலங்காது நிற்போனுக்கு.
நேர்துன்பமே துன்பப்பட்டு
விலகியோடிப் போய்விடும்.

பெற்றதனத்தை மகிழ்வோடு
காவாது விடுத்துவிட்டு.
வறுமையின்காலத்தே இழந்தோமென
அல்லலுறுவோர் எவ்வகையினரோ?

துன்பத்தின் இலக்கு
இவ்வுடலென உணர்ந்து.
துன்பங்கண்டு கலங்காதோரே
இவ்வுலகில் மேலோராவர்.

இன்பம்விரும்பி போற்றாதோன்
துன்பம் வருங்காலதனை.
இயற்கையெனத் தெளிந்து
கலக்கமடைவ தில்லையாம்.

இன்பம் வருங்காலதனை
நுகரவிரும்பிப் போற்றாதான்.
துன்பம் வருங்காலதனையும்
நுகர்ந்து கலங்குவதில்லையாம்.

துன்பமே தனக்கின்பமாய்க்
கருதுவோரின் பகைவரும்
அவன்முயற்சி விரும்பும்
சிறப்புநிலை அடைவான்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# அன்பு ஓர் உருவாஞ்சுருக்கு!



சூரியனின் விரல்களெல்லாம்
சுருங்க சுருங்க
படரும் பனிக்காலத்தின்
ஒரு மாலைவேளை

என் இதயத்தில் ஊறியிருக்கும்
மனஅழுத்த நீரை
இறைத்துக் கொண்டிருக்கிறேன்
நடைப்பயிற்சிக் கமலையால்

அறிமுகமில்லாத
என் கருவேலக்கால்களை
ஓடிவந்து கட்டியணைக்கிறது
கைகால் முளைத்த
சீம்பால் குடமொன்று

உயிர் செல்களை உலுக்கும்
அவனின் பாச மின்சாரம்
ஞாபகப்படுத்துகிறது
தூரத்திலிருக்கும் மகனை.

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# முதியோர்

வாழ்க்கைப் பாடத்தைக்
கற்றுத் தேர்ந்தவர்கள்
துன்ப துயரங்களைத்
தகர்த்துத் தாண்டியவர்கள்

அயரா துழைப்பின் சொந்தக்காரர்கள்
அனுபவத்தைக் கற்பிக்கும்
உயர்ந்த கல்லூரிகள்

காலத்தின் பெறுமதியை
உணர்ந்த ஜீவன்கள்
கலங்கரை விளக்காய்
வழிகாட்டும் விண்மீன்கள்



முதியோர் சொல்லும்
முதுநெல்லிக்கனியும்
கசப்பாக இருப்பினும்
கருத்தினை நிறைத்திடும்

மூத்தோர் சொல்
வார்த்தை அமிர்தம்
ஔவை சொன்னதன்
அர்த்தம் தெளிவு

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,இலங்கை

# பகல் நிலவு!

இரவில் பார்த்து ரசித்த
வெண்ணிலவு ஆனது
எதிரே வந்தது
பகல் நிலவாக.



கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# நிற்பதில்லை காலம்

காலமும் நேரமும்
காத்து நிற்பதில்லை
யாருக்காகவும்; எதற்காகவும்;
உயிர் ஜனித்திடும்
நிமிடங்களோ
கண் இமைத்திடும்
நேரத்தில் நிகழ்ந்து
விடும் அழகியதோர்
ஆனந்த அற்புதம் என்றால்
பிரியத் துடிக்கும்
உயிரோ உடல் கூட்டைக்
கடந்து சென்று
ஆதிப் பரம்பொருளின்
பாதத்தினை அடைந்திடவும்
யாரையும் துணை
சேர்ப்பதில்லையே!
யாருக்காகவும்
காத்திருப்பதுமில்லையே!
ஆதலால்
காலத்தோடு இணைந்து
பயணித்திடுவோம் இனிதே ;
தேவைப்படுவது
சிறிதான நம்பிக்கையும்
காலத்திற்கேற்ப வாழும் சூழலை மாற்றிட
யுக்திகளைக் கற்றுக்
கொண்டிடும் வல்லமையும்;
மட்டுமே!
கற்றுத் தேற்றி விடு
என் உயிர்
இப் புவியில்
ஜனிக்கக் காரணமான
என் தாயே!



கவிஞர் மலர் அபி

# மனசெல்லாம் நீதானடி

மையிட்ட கண்ணும் மலர்ந்த முகமும்
மருதாணி மேனியும் மயக்கும் கேசமும்
முளைத்த அதரமும் முட்டும் சுவாசமும்
மாராப்புச் சேலையும் மாமனை இழுக்குதடி!

கைவளைச் சிணுங்கலும் சலங்கையின் கொஞ்சலும்
சாமந்தித் தோட்டமும் சாய்ந்திடும் திண்ணையும்
சுப்ரபாத வரிகளும் சுற்றமுள்ள உறவுகளும்
கன்னமிட்ட இதயமும் கன்னியுன்னைத் தேடுதடி!

எல்லையற்ற அன்பும் தொல்லையற்ற சூழலும்
என்னுயிர் உள்ளவரை என்றென்றும் தந்திடுவேன்.
என்னவளே எந்தன் மனசெல்லாம் நீதானடி!
என்னுயிரே எந்தன் மடிசாய வாராயடி!




கவிஞர் த.அரசிகுமாரி,அண்டூர்

# என்னவன்

அன்புதனை கற்றுக் கொடுத்து
ஆதரவாய் தோள் சாய்ப்பவனே!

இன்ப துன்பத்தில் பங்கெடுத்து
ஈரடி குறளாய் வாழ விழைபவனே!

உறவுக்கு அர்த்தம் தந்து
ஊரறிய புகழ் பாடியவனே!

என்னவள் எனும் உரிமை தந்து
ஏகாந்தமாய் நிதமும் நான் வாழ நினைந்தவனே!

ஐயம் துறந்து மகிழ்ச்சி பரவிட
ஒற்றுமை உணர்வு மேலோங்கச் செய்தவனே!

ஓதும் வேதமாய் அனுதினமும் மாறி
ஔடதமென கவலைக்கு இதமாகி நின்றவனே!

பரிவுடன் பாசத்தை சேர்த்து
என் நினைவை சுமந்த என்னவனே!

என் நினைவும் மனமும்
நின் முன் நிலையாய் நிற்குதிங்கே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# மாடக்குளம் கதை

வரப்புக்கால் வெட்டி
பரம்படித்த வயல்!
விதைத்த நெல்
அறுவடை சேர
காத்திருக்க!

பட்டாளம் போன மகன்
ஊர் வந்திருக்கும் சேதி
களத்து மேடு வந்தான்
ஓடும் பிள்ளை!



மூத்தப்பள்ளி கருப்பாயி
மாடன் மகன் பார்க்க
மாட வாசல் நிற்க!

மகன் வந்திருக்கும் களிப்பு
மாடத்தி வயல் நண்டு
குழம்பு சோறாக்கினாள்!

முத்துக்கிழவன்
மழைச்சோறு நோன்பு
நாள் குறித்தான்!

பெருமாள்கிழவன்
குலசாமி கும்பிட்டு
நெற்றி நிறைய நீறு
பூசினான்!

கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# அரசியல் இளைஞர்கள்



வளர்ந்து வரும் இளைஞர்களே
நாளைய தலைவர்கள்
கன்னியமாய் போராடு
வீரநடை நீயும் போடு
அரசியலை காதல் செய்
மக்களை அடிமை செய்யாதே
ஓட்டு என்பது விற்பனைக்கு அல்ல
உரிமைக்காக பணியை சுமையாக்காமல்
சேவையை புனிதமாக்கி
வறுமை மக்களுக்கு நல்வாழ்வு கொடுப்போம்
வீழ்ந்து விடாமல் விவசாயத்தில் விடியல் காண்போம்
உரிமை நம் மானம் போன்றது
பூமி நம் அனைவரின் சொத்து போன்றது
இரண்டையும் நம் கண் போன்று பாதுகாப்போம்
இளைஞர்களால் முடியாதது ஒன்றுமில்லை
இளைஞர்கள் இருக்கும் வரை பூமி அழிவது சாத்தியமில்லை
தள்ளி விட்டால் ஓடும் பூனை இல்லை
பாய்ந்து வந்து நேர்மையாக களம் இறங்கும்
சிங்கங்கள் நம் இளைஞர்கள்.

கவிஞர் ப.ஜெகதீஸ்வரி,ஒ.தண்டரை

# முயற்சி செய் பயிற்சி செய்

முயற்சியை மனம் தீர்மானிக்கிறது
பயிற்சியையும் மனமே செய்கிறது
வினைத்திட்பம் என்ப மனத்திட்பம்
செயல்திட்டம் என்ப தொழில்நுட்பம்



புழுக்கள் பட்டாம்பூச்சி ஆகிவிடுகின்றன
கற்கள் சிலையாகி விடுகின்றன
இரும்பு நீரில் மிதக்கிறது
உலோகம் வானில் பறக்கிறது

எது இயலாது உன்னால்?
விண்ணை அளந்தாய்
மண்ணை பிளந்தாய்
உலகை கைக்குள் கொணர்ந்தாய்

பழகினால் நாய்கள் மரமேறுகின்றன
குரங்குகள் குழல் இசைக்கின்றன
ஒற்றைக் காலில் ஒலிம்பிக்கில் ஓடுகின்றான்
தேவை சிறுபொறி! வெற்றி பெற வெறி

தோல்வியைக் கொண்டாடு
தோல்வியிலிருந்து கற்றுக் கொள்
தோல்வியை படிக்கல்லாக்கு
தோல்வியை சேவகனாக்கு

மனிதன் உருவாக்கிய உலகம்
சோம்பிக் கிடந்தால் இல்லை சொர்க்கம்
மனமிருந்தால் மார்க்கம் உண்டு
தினம் முயன்றால் ஏற்றம் உண்டு


கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# மௌன வேள்வி

இதழுக்குள் ஊற்றெடுக்கிறது
அன்பின் அறுசுவை
முத்தமென.

அடைபடும் விரல்களுக்குள்
ஒட்டிக்கொள்கிறது
பிரியத்தின் வாசனை
குருதியென.

நெருக்கத்தின் நினைவுகளில்
புன்னகைக்கிறது பயணத் தருணங்கள்
மலரென.



இளைப்பாற்றும் தேநீரில்
உணர்ச்சிகளின் சொல்லாடல்
ஒளிர்கிறது
நறுமணமென.

சினத்தின் கரத்தினுள்
சிதைந்திடும் பொழுதினில்
எனை மீட்கும் உன் மௌன வேள்வியின்
கடவுள்களை
வருகவென்கிறேன்.

கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# மௌனத்தின் காரணம் என்னவோ

தவணை முறையில் பேசிய
பேச்சுக்கள் எல்லாம்,
மௌன மொழி பேச காரணம் என்னவோ?

தளராமல் பேசும் உனது பேச்சு
என்னிடமத்தில் மட்டும் தடுமாறிய
காரணம் என்னவோ?

முழு மதியைப் போல் இருப்பாய்
இப்போது முகம் காட்ட மறுக்கும்
காரணம் என்னவோ?

நீ என்னை விட்டு தொலைந்த போது
எனக்கு தோன்றிய கேள்விகளுக்கு
பதில் என்னவோ?

கேள்விகள் தொடரும் எனக்குள்
நீ பதில் தரும் வரை.



கவிஞர் க.வீரபாண்டி,புளியங்குளம்,மதுரை

# வெண்பனியே முகந்துடைத்தாயோ

இன்ப வாடை வீசுதே
முன்பனிக்காற்றிலே
நெஞ்சள்ளிப் போகின்ற
இனிமையில்

சொல்லாமல் சென்றாயோ
சொற்களற்ற சேதியில்
வீழ்ந்ததோ விழிக்குள்
குலாவும்



இன்பச் சங்கதியும் சதிராடி
மகிழுந்து
போதை தரும் பார்வையும்
பூக்களை வம்புக்கிழுக்கையில்

காரிகையின் மௌனம் கூட
மோகனத்தில் மின்னிடும்
தேனிதழ் மொழியும் கவிதையின்
கணமும்

வாடுகின்ற பெண்மையும்
வண்ணக் குழைவிலே
குழைந்த போன மாயம்
விழிச்சொடுக்கில் விரைந்த
இளமையின் வேகம்

இளமையின் சுவடுகள் இனிக்குதே
இதயம் தொலைந்த நொடியை தேடுதே

அந்தியும் தாமரையும்
அதிவேக வெட்கத்தில்
பெண்ணவளின் முகச்சிவப்பிலே
மெய்மறந்தனவே

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# சந்தர்ப்ப தழுவல்

கயமைக்கு
காபந்து செய்தே
கடமைக்குள் சிக்கி
உரிமையிங்கு
ஊஞ்சலாடுது

தலை குனிந்தவண்ணம்
கிடப்பதால் தானே
மெழுகுத் தலை
கொள்ளியாகி எரிகிறது

தொடருமா.. என
தொக்கி நிற்கும் வினாக்களிலே

நடுமுதுகில் தங்கிவிடும்
சில்லிப்பு போல
விலகாமலே வலி மீட்டுது

பனித்துளி அறியுமோ!?

பொன்வண்டின் முதுகில்
தானொரு பொதி யென்று

இதுபோன்று
ஏதேதோ உவமை
எழுத்திலும் சிந்தையிலும்
தன்னுள்ளே குழப்பிடும்
சந்தர்ப்ப தழுவலில்



தான் நழுவி சாயல்
மட்டுமிங்கு தன் சாயலில்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# ஆசை

சிறைபட
சிறகடிக்க ஆசை இல்லை
சிவந்த உன் இதயத்திற்குள்
சிறை கைதியாக
சிறைபட மட்டுமே ஆசை



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# கவிதை துளிகள்

மரக்கிளையில்
சிக்கிய நிலவு
நகர மறுக்கிறது
குழந்தை ஒன்றின்
நிலாச்சோறுக்காக

எதிர்கால
மழை மேகம்
காத்திருக்கும்
ஒரு துளிக்காக
தவறும் விதைகள்
சரியாக முளைக்கின்றன

நடுக்கடல் பயணத்தை
கையாளும் திறமையை
மழை நீரில் நனைந்து
மன நீரில் ஓடும்
காகிதக் கப்பலின் மகிழ்ச்சி
கற்றுக் கொடுக்கிறது

பாதை
செப்பனிடுதல் என்பதே
ஒரு சிறந்த பயணத்தின்
தகுதியாகிறது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# வேண்டுமென சில

வேண்டாமென களைந்தோடும் மேகங்களுக்கு
கண்ணீரில் சல்லடைகள் அவசியமில்லை

சறுகுகளின் மீது படும்
காலடிகளின் நரம்பிடையே
நசுக்கலின் புன்னகையை
அறிவதில்லை மரங்கள்.

உச்சி வெளுத்து தாத்தாவிற்கு
அடுத்த அடியில் வெயிலோ
அடுத்த காற்றில் மழையோ
தொடுதல் மட்டும் உணர்வி
பூர்வமானதோர் உண்மை.

புன்னகைப்பவர்க்கு
முதலில் உண்மையை கற்றுக்கொடுங்கள்
அழுபவர்க்கு பொய்பேச கற்றுதாருங்கள்
இரண்டும் இருவர்க்கும் அவசியமே



வேண்டுமென யாரும்
விதியை நம்புவதில்லை
கடலலையில் மொத்தமும்
கால் நனைத்து செல்வதில்லை.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# அனைத்தையும் படைத்தவர் ஆண்டவர் இயேசு!

வியக்க வைக்கும் விண்ணையும்
மயக்க வைக்கும் விண்வெளியையும்
இருளை நீக்கும் ஒளியையும்
குடிக்க முடியா கடல் நீரையும்
அசைந்து வரும் தென்றல் காற்றையும்
அனலாக வீசும் நெருப்பையும்
நிற்காத சுழலும் பூமியையும்
நிலையாக படைத்திட்ட இறைவா!

ஓடும் நதியையும் பாடும் பறவைகளையும்
ஆடும் மயிலையும் கொட்டும் அருவியும்
விண்ணை முட்டும் மாலையும்
காட்டில் வாழும் விலங்குகளையும்
வீட்டில் வாழும் மானிடரையும்
ஒரு சொல்லாலே படைத்திட்ட ஆண்டவர் இயேசுவே!

நித்தமும் உமக்கே புகழ் மாலை
சூட்டுவதே என் முதல் வேலை
உன் திருவடியை நித்தமும் தொழுகிறேன்!

உம் திருப்புகழை அழகிய தமிழில் பாடுகிறேன் !
நீர் செய்யும் அதிசயங்கள் அற்புதங்களை நினைத்து வியக்கிறேன்!
சூழ்நிலையும் மற்றும் காலநிலையும் மாற்றுபவர் நீரே!
அற்பமானதை அற்புதமாக மாற்றுப்பவரும் நீரே!
துவண்டு போன நேரங்களில் துணையாக வந்து
துயர் துடைக்கும் தூயவர் நீரே!



பாவியாக இருப்பவர் கருணையோடு அழைத்தால்
பாசம் காட்டி நேசிக்கும் உண்மை நேசரே!
நன்மைகள் செய்பவரே!
நாளும் உயிரோடு இருப்பவரே!

உம்மை போற்றுகிறேன்!
உம்மை புகழ்கிறேன்!
உம் திருவடியில் சரண் அடைகிறேன்!

கவிஞர் அ.இராபர்ட்கென்னடி,கானூர்

# மாலவனும் வைணவமும் - பகுதி 6

மாலவன்பால் மிக்கமைந்த பக்தியினால் வைணவத்தின்
ஈடுபாட்டால் ஆழ்ந்தமைந்த பற்றாளர் பன்னிருவர்!
அவருள்ளும் முதலாழ்வார் மூவரென்பர்! அவர்களில்
முன்னவர்தான் பொய்கையார் என்பவரே! பூதத்தார்
பேயாழ்வார் சமகாலம் வாழ்ந்தவரே! விஷ்ணுபக்தர்
ஐப்பசியின் திருவோணம் தோன்றிட்டார் அன்னவரே!
காஞ்சிநகர் திருவெஃகா சொன்னவண்ணம் செய்தபெம்மான்
பொய்கைதனில் அவதரித்தார்! எதோக்தகாரி ஆலயந்தான்
நற்பிறப்பே! அவர்காலம் கிறிஸ்துவுக்கு முன்னமைந்த
நான்காயிர இருநூற்று மூன்றென்பர்! யாத்ததுவோ
முதலாவது அந்தாதி என்பதுவாம்! அவர்குருவோ
சேனைமுத லியாரென்பார்! விசிஷ்டாத்வை தமதேஅவர்
கொண்டதுவும் பரப்பியதும் ஆனதுவே! நூறுபாடல்
அந்தாதி அமைப்பதனைக் கொண்டதுவே! தசாவதாரப்
பாடல்கள் யாப்பினிலே மிளிர்ந்ததுவே! அன்னவரோ
பெருமாள்தன் கரத்தமைந்த பாஞ்சஜன்யம் வெண்சங்கின்
அம்சம்தான் அன்னவரே! திவ்யதேசம் சென்றிறைஞ்சி
மங்களாசா சனங்களாற்றல் துய்கடனாய்க் கொண்டவரே!
தாந்தனித்தும் மற்றவரின் கூட்டோடும் முற்றுவித்தார்
அன்னவரே! ஞானபக்தி வைராக்யம் துறவறம்
பெருமாளின் நினைவினிலே கனிந்துபாடி மகிழ்ந்தவரே!
உண்டியுடை நினைப்பில்வாழ் மாந்தரொடு கலவாது
ஓரிடத்தே நிலைத்தமையா தேசசஞ்சா ரப்பண்பினர்!
முதலாழ்வார் மூவருமே தனித்தனியே சஞ்சரித்தோர்!
மங்களாசா சனம்செய்த கோயில்கள் திருவரங்கம்
திருவெஃகா திருக்கோவலூர் பரமபதம் திருப்பதியும்
திருப்பாற்கடல் என்றமையும்! ஒருவரெனில் படுத்திடவும்
இருவரானால் அமர்ந்திடவும், மூவற்கோ நிற்கத்தான்
இயலிடத்தே நால்வரான திருக்கோவலூர் நிகழ்வெண்ணில்
மாவியப்பே! பொய்கைதன் பாவமிழ்தம் சுவைப்போமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# வாழவை!

விளைந்திடும் பயிருக்கு
வேண்டிய நீரில்லை!
களையான நெல்வயலைக்
களையாக விடலாமோ?
களைந்திடு துயரென்று
கரம்நீட்டி வேண்டுகிறேன்!

இப்புவியின் பரப்பினிலே
முப்பங்கு நீர்படைத்தாய்!
எப்(ம்)பங்கும் இல்லையெனில்
முப்போகம் விளைவதெங்கே?
இப்போகம் விளைந்திடவே
இன்னருள் புரியாயோ?



பெருகிடும் கண்ணீரில்
உருகாதோ உந்தனுள்ளம்?
நெல்விளையும் நிலங்களிலே
கல்லறுக்கும் நிலைதகுமோ?
கரையட்டும் கல்நெஞ்சம்-நின்
கருணை மழையாலே!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# சிறுவாட்டுக்காசு



பள்ளிக்குக் கிளம்பியதும்
பாசத்தில் கொடுக்கும்
அள்ளிய முத்தத்துடன்
அன்புப் பரிசு

பாக்கெட் சில்லரைகளை
பக்குவமாய் மகளிடம்
அக்கறையோடு ஏதாச்சும்
அந்தாண்ட வாங்கிக்கடா

சேமிப்பு பழக்கத்தை
சேர்த்திடக் கற்று
தினமும் உற்றுநோக்கி
உண்டியலை எப்படாநிறையும்

இப்படியாக ஆசையில்
இனிக்கச் சேர்த்தது
அப்பாவின் அன்பு
பொக்கிசமாய் நிறைந்திடும்

ஏதோ ஒருவேளை
கஷ்டத்தின் மத்தியில்
பணமில்லாச் சிரமத்தில்
பாடுபடும் குடும்பம்

தந்தையின் முன்னே
தாங்கிடும் மகள்
இந்தாப்பா பணம்
இதவைச்சுக்க செலவுக்கு

பெற்றவர் மனதும்
பொன்னாகப் பூத்திடும்
பற்றோடு பிள்ளையை
பாசத்தில் முத்தமிடும்


சிறுவாட்டுக் காசு
சிறிதாய்ச் சேமித்தாலும்
வறுமையின் போது
வழங்கிடும் மகிழ்ச்சியை

கவிஞர் கிருஷ் அபி

# விடியல் எங்கே?

யார் யார் வாழ்வை சொல்வது
யார் யார் வாழ்வை வெல்வது
காலம் காலமாக மனித மடமையில்
காவியச் சித்திரமாய் நித்தினம்
பிறந்தது யாரால் என்று அறிந்த நாம்
வளர்ந்தது யாரால் என்று அறிந்த நாம்
நம் வாழ்க்கையின் முன்னீர் கடலை கடப்பது யாராலோ
வழி தெரியாமல் வறுமை ஒரு பக்கம் கொடுமை ஒரு பக்கம்

ஆண்டவனிடமும் நீதி கேட்க நேரமில்லை
நீதி சாட்சியிடம் நீதி சொல்ல நேரமில்லை
வகுக்கப்பட்ட வரலாறு மாற்றப்பட்டது
மாற்றப்பட்ட வரலாறு இன்று வகுக்கப்படுகிறது
என்னென்ன காட்சிகள் காலங்காலமாய்
எடுத்துரைக்கும் பல சாட்சிகள்
அறிவறிந்த பின் என்னென்ன சாட்சிகள் எடுத்துரைக்க
ஒரு காட்சிகளும் இல்லை



ஏன் இந்த நிபந்தனை இந்த நிரந்தரமற்ற உலகில்
மனிதா மறந்து விட்டாயா உன் மரணத்தை
உண்மையை எடுத்துரைக்க உனக்கு ஏன் பயம்
காலத்தில் அழிவது அனைவருமே மெய்மை
ஏன் இந்த தயக்கம் காலம் காலமாக கம்பீரமில்லாமல் களவு போய்
தோற்று கொண்டு இருக்கிறாயா
அல்லது தோற்று விட்டுக் கொண்டு இருக்கிறாயா என்று
புரியாமல் நீயே உன் மனநிலையில்
ஏழை என்னும் கூட காலம் காலமாக நிபந்தனை சபையில்

பணக்காரன் என்னும் சுவடு காலம் காலமாக சந்ததிகள் வழியில்
என்ன நடக்குது நாட்டிலே இவ்வுலகம் என்னும் கூட்டிலே
இறப்பதை மறந்து விட்டு இருக்கும் வரை அனுபவிப்பது மனித மடமையா ?
மனிதா மறந்து விடாதே
இங்கு உன் உடல் அமைப்புக் கேற்ற இடம் ஒன்றுதான் நிரந்தரம்
வழிகாட்டு வாழ விடு வழித்தடம்
போட்டு காலத்தில் ஆற்று உன் வரலாற்றின் கூற்று
எல்லாம் சமம் எல்லாம் அகிலத்தின் பின்னணியே
நம் பிறப்பினால் அறிந்த முன்னணியே

கடந்ததை நேசிக்காத நடப்பதை
யோசிக்காது இருப்பதை யோசிப்போம்.
விடியலும் விடியல் எனும் வீணை
அனைவரின் உள்ளத்தில் இருந்தால்
உங்கள் வீடு தேடி வரும் விடியல்.

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# துளிப்பாக்கள்

1. உச்சி வெயில்
காலடியில் பதுங்குகிறது
நிழல்

2. விமானம் உதிர்க்கும் குண்டுகள்
வெடித்துச் சிதறுகின்றன
மனித மனங்கள்

3. மண் பிடித்த வேர்கள்
காற்றில் அசைகின்றன
மலர்ந்த பூக்கள்

4. கூட்டுப் புழு
சிறகடிக்கத் துவங்குகிறது
பரிணாம வளர்ச்சி

5. மரத்தடி உறக்கத்திற்கு
மாலையில் சம்பளம்
நூறு நாள் வேலை

6. திறந்திருக்கும் வாசல் கதவு
தட்டியும் திறக்கவில்லை
மனக்கதவு



கவிஞர் ரவிஜி

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -8** **முறுக்குப் பெட்டி இருபத்திரண்டு**



திவ்யாவைத் தூக்கிக் கொண்டு கையில் பாலுடன் வந்தாள் புவனா.

"இன்னைக்கு அத்தா நம்மக் கூடவா படுக்கப் போறாங்க அப்பா"

"ஆமா"

"அத்தா எனக்கு கதை சொல்லுவியா?"

"ஓ! ராஜகுமாரி கதை சொல்லட்டுமா?"

"அய்... பழம் வச்சிருக்கு, லட்டு மைசூர் பாகு எல்லாம் வச்சிருக்கு என்னப்பா எதாவது விசேசமா?"

"ஆமா கண்ணு. அத்தா நம்மக் கூட வந்திருக்காங்க இல்லையா, அதற்காகத்தான் இதெல்லாம் சித்தப்பா கொண்டு வந்திருக்காங்க"

"திவ்யா பால் சாப்பிடுகிறாயா கண்ணு" புவனா கேட்டாள்.

"ம்கூம். நான் ஆப்பிள் சாப்பிடறேன்" என்று ஒரு பழத்தை எடுத்துக் கடிக்க ஆரம்பித்தாள்.

"ரொம்பா வருத்தமா புவனா?"

"எதற்கு?"

"இல்லை உன் முகத்தைப் பார்த்தால் ரொம்பா சோகமாக இருக்கிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். எங்க அம்மா சொன்னதிலே உனக்கு வருத்தமா? என்னாலே எடுத்துச் சொல்ல முடியாது புவனா. அவர்களுடைய தலைமுறை அவர்களை அப்படி வளர்த்து விட்டது. அவர்களை இனி மாற்ற முடியாது. நாம் தான் இனி அவர்களோடு மாறிப் போகணும். அவர்களை மாற்ற நினைத்தால் உடைந்து போவார்கள். அதனால் தான் சில விசயங்களை எதிர்த்து பேச முடியாமல் போய் விட்டது."

"பரவாயில்லை அத்தான். எனக்கு எல்லாம் புரியுது. ஆனால் சோகமும் துக்கமும் அடக்க முடியாத படி அழுத்துகிறது. இதிலே வேற கல்யாண வேலைகள் செய்ததில் ஒரே களைப்புதான் என் முகத்திலே சோகமாக உங்களுக்கு தெரியுது."

"இவ்வளவு புரிந்து வைத்திருக்கிற புவனா நீ எனக்கு மனைவியாக வந்ததிலே எனக்குச் சந்தோஷம்தான். இந்தக் கல்யாணம் உனக்கு எப்படித் தோணுதம்மா?"

**இரஜகை நிலவன்**

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -8** **முறுக்குப் பெட்டி இருபத்திரண்டு**

"இவ்வளவு வெளிப்படையாக பேசறதால உங்களிடம் சொல்வதில் எனக்கு எந்த பயமும் தோன்ற வில்லை. திருமணம் முடியுமுன்னே ஒரு மூன்று வயதுக் குழந்தைக்கு அம்மாவாகப் போகிறோமே என்ற குறை ஒரு கரையில் இருந்து அழுத்திக் கொண்டிருந்தாலும் சிவா அத்தான் எனக்கு கணவர் என்னும் போது எனக்குள்ளே ஒரு பெருமை, சந்தோஷம், மகிழ்ச்சி அது என்ன வென்று சொல்லத் தெரியாத புளகாங்கிதமாக இருக்கிறது." பேசிக்கொண்டிருக்கும் போதே கொட்டாவி விட்டாள் புவனா.

"நீ என் மனைவி என்பதை விட இந்தக் குழந்தைக்கு அம்மாவாக மாற வேண்டும் என்பது தான் எனக்கு ஆசையாக இருக்கிறது."

"இவள் என்னைச் சித்தி என்று கூப்பிட்டால் கூட சின்னம்மா என்கிற ஸ்தானத்திலாவது இருக்கிறோமே என்று சந்தோசப் பட்டுக்கொள்ளத் தோன்றும். இவள் என்றைக்குப் பேச ஆரம்பித்தாளோ அன்றையிலிருந்து என்னை அத்தா என்றுதான் கூப்பிடுகிறாள். முன்னாலே 'அக்கா' என்று கூப்பிடுகிறாளோ என்று கூடத் தோன்றியது. ஆனால் இந்த இளம் பிஞ்சு இனி என்னை எப்போது அம்மாவாகப் பாவிக்கப் போகிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது."

"நாம்தான் சொல்லிப் புரிய வைக்க வேண்டுமா? இல்லை நம் அரவணைப்பிலும் நாம் காட்டும் அன்பிலும் இவள் என்னை அம்மாவாக பாவிக்கப் போகிறாளா? இல்லையென்றால் வேறு ஏதாவது வழியில் நான் இவளைக் கவர வேண்டுமா? எனக்குப் புரிய மறுக்கிறது."

...தொடரும்

இரஜகை நிலவன்

# திருவள்ளுவர்

கட்டுரை

’கம்பரும் திருவள்ளுவரும் தமிழுக்கு கதி என்பது நம் ஆன்றோர் வாக்கு.



வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாரதியார் புகழ்ந்துள்ளார். இன்னொரு புலவர், பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ? என்றும் பாடியுள்ளார். யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை, உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை

- என்றார் பாரதி.

தமிழகம் செய்த தவப்பயனால் திருவள்ளுவர் தமிழகத்தில் பிறந்தார். தரணிக்கே நீதி நெறி புகட்டும் திருக்குறளை யீந்தார். திருவள்ளுவர்.

திருக்குறள் தமிழில் மலர்ந்தது. பிற உலக மொழிகளில் பெயர்ந்தது.

தமிழ் மறையான இந்நூல் உலகின் பொதுமறையாகத் திகழ்ந்தது.

திருவள்ளுவர் பற்றிய வாழ்க்கை வரலாறு முழுவதும் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை.

சமகாலப் புலவர்களால் இவர் பெரிதும் பாராட்டப்பட்டார் என்பதை திருவள்ளுவர் மாலையால் நம்மால் அறிய முடிகிறது. ஒரு புலவரை மற்ற புலவர்கள் பாராட்டுவது அரிதினும் அரிது.

சங்க காலத்தின் பதினெண் கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் தெய்வப் புலவர் எனப் போற்றப்படும் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

# திருவள்ளுவர்

கட்டுரை

கடவுளுக்கு மனிதன் கூறிய நூல் திருவாசகம் மனிதனுக்கு கடவுள் கூறிய நூல் பகவத்கீதை

மனிதனுக்கு மனிதன் கூறிய நூல் திருக்குறள். திருவள்ளுவர் மனித இனத்தின் மாண்புகளை நன்குணர்ந்தவர்.

திருக்குறளை ஔவையார் பாராட்டுகையில் "அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என்று திருவள்ளுவ மாலையில் புகழ்கிறார்.

மதுரைத் தமிழ் நாகனார் எனும் புலவர், "எல்லாப் பொருளும் இதன்பா லுள, இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" - என்று பாராட்டுகிறார். இவ்வாறு திருவள்ளுவர் மாலையில் புலவர்களின் பாராட்டுகளைக் காணலாம்.

திருக்குறளை டாக்டர் ஜி.யு.போப் அவர்களும் வ.வே.சு ஐயர் அவர்களும் தீட்சிதர், ராஜாஜி போன்றோரும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர்.

## சிறப்புப் பெயர்கள்

திருவள்ளுவர் பல சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். அவை:

- தேவர்
- நாயனார்
- தெய்வப்புலவர்
- செந்நாப்போதர்
- பெருநாவலர்
- பொய்யில் புலவர்
- பொய்யாமொழிப் புலவர்
- மாதானுபங்கி
- முதற்பாவலர்



# திருவள்ளுவர்

கட்டுரை

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் (இன்பத்துப்பால்) என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

அறத்துப்பால் — முதல் பிரிவான 'அறத்துப்பாலில்' மனசாட்சி மற்றும் மரியாதை, நல்ல நடத்தை போன்றவற்றை பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற உட்பிரிவுகளில் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

பொருட்பால் — இரண்டாவது பிரிவான 'பொருட்பாலில்' உலக விவகாரங்களில் எவ்வாறு சரியான முறையில் நடந்து கொள்வது என்பதை அரசியல், அமைச்சியல், அங்கவியல், ஒழிபியல் போன்ற உட்பிரிவுகளில் விளக்கியுள்ளார்.

இன்பத்துப்பால் — மூன்றாவது பிரிவான 'இன்பத்துப்பால்' அல்லது 'காமத்துப்பாலில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையேயான காதல் மற்றும் இன்பத்தைத் தெளிவாக களவியல், கற்பியல் என்ற தலைப்புகளில் எடுத்துரைக்கிறார்.

முதல் பிரிவில் 38 அத்தியாயங்களும், இரண்டாவது பிரிவில் 70 அத்தியாயங்களும் மற்றும் மூன்றாவது பிரிவில் 25 அத்தியாயங்களும் உள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்தில் பத்து ஈரடி குறள்கள் என மொத்தம் 1330 குறள்கள் உள்ளன.

திருக்குறளில் உள்ள அனைத்து கருத்துகளும், உலகில் உள்ள அனைத்து திருக்குறள் சமயங்களுக்கும் பொருந்துவதாக உள்ளது. இந்நூல், ஏறக்குறைய 2000 ஆண்டு பழமையானது என்று கணிக்கப்பட்டாலும், இதை இயற்றப்பட்ட காலம் இன்னும் சரியாக வரையறுக்கப்படவில்லை.

உலகில் தமிழுள்ளளவும், மனித இனம், வாழுந்தோறும் வள்ளுவம் வாழும்... உலகை வாழவைக்கும்.

நன்றி : தமிழ் வளர்த்த தமிழ்த் தொண்டர்கள் - டாக்டர் அறிவுச்சுடர்
https://www.itstamil.com/thiruvalluvar.html
https://ta.wikipedia.org

அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
உரக்க சொல்வோம்
அகர முதல
நாளை நமதே
எங்கே இருக்கின்றீர்களோ அங்கிருந்தே,
எதை வைத்துள்ளீர்களோ
அதைக்கொண்டு, உங்களால் என்ன
முடியுமோ அதை செய்யுங்கள்.
AAGARAMUTHALAA NEWS
அகர முதல செய்திகள்
/Aagaramuthalaa
/www.aagaramuthalaa.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

agaramuthalaa

aagaramuthala@gmail.com